உ

திருச்சிற்றம்பலம்

# அன்னதானம் பாடல்

அசூர்.திரு.சிங்கார தனபாலன்,கும்பகோணம்.

1. பசியென்று வந்தோர்க்கு புசியென்று உணவுதர
பசி வயிறு குளிர்ந்தது பாங்காக வாழ்த்து முன்னை
பாவ கிரக தோட மெல்லாம் பாதிக்காது விலகும் போலும்
பல்லாண்டு பாரதனில் வளமாக வாழ்வாய் பாரு!
2. தானங்கள் பலவற்றின் சிறந்தது அன்னதானம்
தானத்தை செய்வோர்கள் தான் பெறுவர் பேரனைத்தும்
தக்கபேறு தக்கநேரம் தான் வந்து காப்பளிக்கும்
தற்காப்பு இதுவன்றி தான் வேறு இல்லைசொல்ல!
3. ஒரு வேளை உணவு ஒருவருக்கு உவப்போடு ஈவாய்யெனில்
ஒரு நாள் உணவாய்ப்பல்கி உனக்காக காத்திருக்கும்
பெறுவாய் இது உண்மை பேரருள் காப்பு அதனால்
பெற்றுமே திகழ்ந்திடுவாய் வாழ்விலிதை பெற்றிடுக!
4. பெற்ற குழந்தைகளின் பிறந்தநாள் அன்னதானம்
பின்னாளில் அவர்வறுமை பற்றாத புனிதபேராம்
உற்றவர் தம்கடமை உரித்தாகும் என்று எண்ணி
உடன் வாய்ப்பு கிட்டும்போது செய்வார்கள் உயர்ந்தோரே!
5. தன்கருமம் செய்தே தனம்தேடும் தரமிக்கார்
தான்பெற்ற தனத்தில் ஒருபங்கு அன்னதானம்
தான் செய்தால் தான்பெற்ற செல்வமும் தானோங்கி
தரணியில் வாழ்வாங்கு தான் வாழ வழிவகுக்கும்!
6. சஞ்சித கருமத்தினால் சார்ந்தவுடல் வியாதிநீங்க
சந்தர்ப்பம் அன்னதானம்;சார்வாய்ப்பை இழந்திடாது
நெஞ்சகமாய் உவப்போடு நேர்த்திகடன் முடித்திடவே
அஞ்சுதற்கு இடமே இல்லை! அவர் வாழ்வில் நலமே கிட்டும்!
7. இருப்பதுபொய் போவதுமெய் இதைஎண்ணிப் பார்த்திட்டே
இருக்கும் வாழ்வில் அன்னதானம் தம்கடனாய் செய்திடவே
இருப்பு அதுவாம் தெய்வநிலை தன்நிழலில் இருக்கவைத்து
இன்பபேற்றில் திளைக்கவைத்து பிறவிப் பேற்றை அளித்திடுமே!
8. பிறப்புக்கும் இறப்புக்கும் இடையேயுள்ள வாழ்வதனில்
பிணியதுவாம் நீங்காப்பிணி பசிப்பிணியாம் அறிந்திடுக
பிறப்புரிமைப் பெற்றோரே! நின்பிணியை நீக்குமுன்னம்
பிறபிறப்பார் பிணியை நீக்க, நீர்பிறப்பில் உயர்ந்தோரே!
9. அன்னதானம் தான்மறுத்து தன்வயிற்றை அடைந்திட்டால்
முன்னம்பேய்கள் கழுகுநாய்கள் தனக்கெனவே முனைந்துநிற்கும்
இன்னும் இதை அறிந்திடாமல் இருந்திடவே நிகழ்வாழ்வில்
இருந்தும் உண்ணாநிலைதானோ! தவிப்போ அலைவுதானோ!
10. தன்னுயிர் போல்பிறவுயிரை காக்கஎண்ணி அன்னதானம்
தான்செய்ய மண்ணுயிரும் தன்உயிராய் காக்கும் உன்னை
தயங்காது தருணமிது எனக்கொண்டு தகஉணர்வில்
தான்கொள்ள உனையன்றிதானுயர்நதோர் இல்லைசொல்ல!

நன்றி: திருக்கயிலை



www.annadhaanam.in